ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ குன்றமெடுத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ குன்றமெடுத்து ॥

தலைவியிரங்கல் - 2

குன்றம் எடுத்து மழை தடுத்து⋆ இளையாரொடும்⋆
    மன்றில் குரவை பிணைந்த மால்⋆ என்னை மால்செய்தான்⋆
முன்றில் தனி நின்ற பெண்ணை மேல்⋆ கிடந்தீர்கின்ற⋆
    அன்றிலின் கூட்டைப்⋆ பிரிக்ககிற்பவர் ஆர்கொலோ (1)

பூங்குருந்தொசித்து ஆனை காய்ந்து⋆ அரி மாச்செகுத்து⋆
    ஆங்கு வேழத்தின் கொம்பு கொண்டு⋆ வன் பேய் முலை
வாங்கி உண்ட⋆ அவ்வாயன் நிற்க⋆ இவ்வாயன் வாய்⋆
    ஏங்கு வேய்ங்குழல்⋆ என்னோடாடும் இளமையே (2)

மல்லொடு கஞ்சனும்⋆ துஞ்ச வென்ற மணிவண்ணன்⋆
    அல்லி மலர்த் தண் துழாய்⋆ நினைந்திருந்தேனையே⋆
எல்லியில் மாருதம்⋆ வந்தடும் அதுவன்றியும்⋆
    கொல்லை வல்லேற்றின் மணியும்⋆ கோயின்மை செய்யுமே (3)

பொருந்து மா மரம்⋆ ஏழும் எய்த புனிதனார்⋆
    திருந்து சேவடி⋆ என் மனத்து நினைதொறும்⋆
கருந் தண் மா கடல்⋆ கங்குல் ஆர்க்கும் அதுவன்றியும்⋆
    வருந்த வாடை வரும்⋆ இதற்கினி என் செய்கேன் (4)

அன்னை முனிவதும்⋆ அன்றிலின் குரல் ஈர்வதும்⋆
    மன்னு மறி கடல் ஆர்ப்பதும்⋆ வளை சோர்வதும்⋆
பொன்னங்கலையல்குல்⋆ அன்ன மென்னடைப் பூங்குழல்⋆
    பின்னை மணாளர்⋆ திறத்தவாயின பின்னையே (5)

ஆழியும் சங்கும் உடைய⋆ நங்கள் அடிகள் தாம்⋆
    பாழிமையான கனவில்⋆ நம்மைப் பகர்வித்தார்⋆
தோழியும் நானும் ஒழிய⋆ வையம் துயின்றது⋆
    கோழியும் கூகின்றதில்லைக்⋆ கூர் இருள் ஆயிற்றே (6)

காமன் தனக்கு முறையல்லேன்⋆ கடல் வண்ணனார்⋆
மா மணவாளர்⋆ எனக்குத் தானும் மகன் சொல்லில்⋆
யாமங்கள் தோறும் எரி வீசும்⋆ என்னிளங்கொங்கைகள்⋆
மாமணி வண்ணர்⋆ திறத்தவாய் வளர்கின்றவே (7)

மஞ்சுறு மாலிருஞ்சோலை⋆ நின்ற மணாளனார்⋆
நெஞ்சம் நிறை கொண்டு போயினார்⋆ நினைகின்றிலர்⋆
வெஞ்சுடர் போய் விடியாமல்⋆ எவ்விடம் புக்கதோ⋆
நஞ்சுடலம் துயின்றால்⋆ நமக்கினி நல்லதே (8)

காமன் கணைக்கோர் இலக்கமாய்⋆ நலத்தின் மிகு⋆
பூ மரு கோலம்⋆ நம் பெண்மை சிந்தித்திராது போய்⋆
தூமலர் நீர் கொடு⋆ தோழி! நாம் தொழுதேத்தினால்⋆
கார் முகில் வண்ணரைக்⋆ கண்களால் காணலாம் கொலோ (9)

வென்றி விடையுடன்⋆ ஏழ் அடர்த்த அடிகளை⋆
மன்றில் மலி புகழ்⋆ மங்கை மன் கலிகன்றி சொல்⋆
ஒன்று நின்ற ஒன்பதும்⋆ உரைப்பவர் தங்கள்மேல்⋆
என்றும் நில்லா வினை⋆ ஒன்றும் சொல்லில் உலகிலே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥